©
GOVERNMENT OF TAMIL NADU
2013

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[Price: Re. 0.80 Paise.

# TAMIL NADU GOVERNMENT GAZETTE

**EXTRAORDINARY** PUBLISHED BY AUTHORITY

No. 180] CHENNAI, THURSDAY, JUNE 27, 2013
Aani 13, Vijaya, Thiruvalluvar Aandu–2044

## Part VI—Section 2

**Notifications or Orders of interest to a section of the public issued by Heads of Departments, etc.**

## NOTIFICATIONS BY HEADS OF DEPARTMENTS, ETC.

### COLLECTORS AND LOCAL AUTHORITIES

**ஊராட்சிகளின் ஆய்வாளர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர், வேலூர்.**

**வேலூர் மாவட்டம், வேலூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட தெள்ளூர் ஊராட்சி மன்றத் தலைவரை பதவியிலிருந்து நீக்கம் செய்தல் பற்றிய அறிவிக்கை.**

*[ந.க. அ4 /1390/2012/உ.இ.ஊராட்சிகள்].*

**No. VI(2)/119(a)/2013.**

தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் **1994** பிரிவு **205** உட்பிரிவு **11–**ல் ஊராட்சிகளின் ஆய்வாளர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவருக்கு அளிக்கப்பட்ட அதிகாரத்தின்படி வேலூர் மாவட்டம், வேலூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த தெள்ளூர் ஊராட்சி மன்றத் தலைவர் திரு. B. சரவணன் என்பவர் தனது அதிகாரத்தை தவறாக பயன்படுத்தி, நகர் ஊரமைப்பு துறையின் அனுமதியின்றியும், மனைப்பிரிவு அங்கீகரித்தல் ஊராட்சியின் ஒப்புதல் பெறப்படாமலும், உரிய கட்டணம் வசூலிக்காமலும், விதிமுறைகளை பின்பற்றாமல் தன்னிச்சையாக மனைப்பிரிவுகளுக்கு அங்கீகாரம் வழங்கியதன் மூலம் ஊராட்சி மற்றும் அரசுக்கு நிதிஇழப்பு ஏற்படுத்தியது தொடர்பாகவும், ஊராட்சி நிதியில் விதிமுறைகள் பின்பற்றாமல் செலவினம் மேற்கொண்டு அதிகாரத்தினை தவறாக பயன்படுத்தி ஊராட்சிக்கு நிதிஇழப்பு ஏற்படுத்தி நிர்வாக சீர்கேடு செய்தது தொடர்பாகவும், தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் **1994** பிரிவு **205–**உட்பிரிவு **(1)–**ன் கீழ் பிறப்பிக்கப்பட்ட குற்றச்சாட்டுகள், அக்குற்றச்சாட்டுகளுக்கு ஊராட்சி மன்றத்தலைவர் அளித்த விளக்கங்கள் மற்றும் ஊராட்சி மன்றத்தின் கருத்தினை பரிசீலனை செய்து, உளத்தேர்வின்படி தெள்ளூர் ஊராட்சி மன்றத்தலைவர் திரு. B. சரவணன் என்பவரை தெள்ளூர் ஊராட்சி மன்றத்தலைவர் பதவியிலிருந்து நீக்கம் செய்து இதன் மூலம் அறிவிக்கை வெளியிடப்படுகிறது.

தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் **1994** பிரிவு **262 (1)–**ன் கீழ் இந்த பதவி நீக்கம் குறித்த அறிவிப்பு ***தமிழ்நாடு சிறப்பு அரசிதழில்*** வெளியிடப்படும் நாள் முதல் அமுலுக்கு வரும்.

தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் **1994** பிரிவு **205** உட்பிரிவு **12–**ன் கீழ் இந்த பதவி நீக்க அறிவிக்கை சம்மந்தமாக அரசிற்கு மேல்முறையீடு ஏதேனும் செய்ய விரும்பினால் தமிழ்நாடு அரசிதழில் பதவி நீக்கம் குறித்த அறிவிக்கை வெளியிடப்படும் நாளிலிருந்து **60** நாட்களுக்குள் மேல் முறையீடு செய்யலாம்.

வேலூர்,
**2013 ஜூன் 26.**

**பொ. சங்கர்,**
*ஊராட்சிகளின் ஆய்வாளர் மற்றும்*
*மாவட்ட ஆட்சித்தலைவர்*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநரால்
அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.

DTP—VI-2 Ex. (180)